Registered as a News Paper in Ceylon
P. M. G. No. H. A. 59/300 of 1953.

# இந்து சாதனம்

விரோதி ஆடு (1889) ஆவணி 28உ ஆரம்பமானது

வெள்ளி தோறும் வெளிவருவது

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசு தென்றலும் வீங்கிள வேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே. தனிப்பிரதி: சதம் 10.

[புத்-சுஅ] யாழ்ப்பாணம்:- துன்முகிஹு ஐப்பசிீ கஎஉ வெள்ளிக்கிழமை (2 NOV. 1956) [இல-உக]

அரசியல் அலை

## கொழும்பு அரசியற் கோட்டைக்காகக் கட்சிக் கொளுவுதல்

---:0:---

### இடதும் வலதும் எல்லாரும் ஒருவர்க்கொருவர் எதிர்ப்பு

### கொள்கை வரம்பு கோணலாய் விட்டது

பாராளுமன்றத் தேர்தலிலே நேரடியான வெற்றிபெற்ற ம. ஐ மு. வுக்கு அட்டமத்திலே கெட்ட கிரகங்கள்போலும். ஒருகணம் ஆவது ஆறுதலாக அமர்ந்திருக்க முடியாத ஆதிக்கக் கட்சியின் பலத்தைப் பரிசோதிக்கக் கொழும்புமாநகர தேர்தல் வந்துவிட்டது. போட்டியிடும் கட்சிகளைப் பார்த்தால் இந்த நாட்டிலே எந்தக்கட்சி என்ன கொள்கையுடையது என்று தெரியாத விதமாக வாக்காளர்களாகிய போதுசனம் திகிலடையவேண்டியிருக்கிறது.

ஒரு காலத்தில் இடதுசாரிகள் வலதுசாரிகள் என்று போட்டிகள் நடந்தன. ஐ. தே. கட்சி கொள்கையில் வலது என்றும் ஏனையோர் இடது என்றும் பெரும் பிரிவு இருந்தது. பின்னர் வலதுபக்கத்திலே பிளவு தோன்றி ம. ஐ. மு. முளைத்தது. இடது கட்சிகள் இந்தப் புதுக் கூட்டுக் கட்சியை எதிர்த்தும் எதிர்க்காமலும் சமரசமாய் நடமாடினர். இப்பொழுது ஒவ்வொருவரும் தன்னந் தனிமையாகப் போட்டியில் இறங்கியிருக்கின்றனர். இதன் கருத்து யாது?

வாக்களிக்கும் பொதுசனம் பொதுவுடைமைக்கும் சமசமாசக் கொள்கைக்கும் உண்மையில் உள்ள கொள்கை வேற்றுமையை யறிவதெப்படி: இவ்வாறே ம ஐ. மு வுக்கும் ஐ. தே. க வுக்கும் எங்கே வித்தியாசம் கண்டுபிடிப்பது? ஆகவே கொழும்பு நகர ஆதிக்கத்தைக் கைப்பற்றும் நோக்கமே தேசாபிமானமாக இக்கட்சிகள் கொண்டிருக்கின்றனர் என்று தெரியவருகின்றது.

# பட்டம் பெற்றதுடன் படிப்பு நிறைவாகிவிடமாட்டாது!

---0---

## அறிவு வளர்ச்சிக்கு அதை அத்திபாரமாகப்பயன்படுத்தல்வேண்டும்

(பாரதப்பிரதமர் நேருப்பெரியார் தெல்கிமாநகரில் மூன்ருவது இளைஞர் விழாவிற் சொற்பெருக்குப் போது பின் வருமாறு குறிப்பிட்டார்)

எம்மிடத்தில் ஆக்கச் சக்தியை உண்டாக்கும் விவேகமானது வளரும் பொருட்டு ஒவ்வொருவரிலுமுள்ள ஆன்ம சக்தி விரிந்து வளர்தற்கு ஏற்ற வசதி உண்டாக்கபபடவேண்டும். உங்களைச் சுற்றியுள்ள எந்த ஒரு மிகச் சிறிய பொருளிலும் நீங்கள் சிந்தையை விரும்பிச் செலுத்தத் தக்கவாறு உங்கள் ஆற்றலை வளர்த்துக்கொள்ள வேண்டும். இவ்வாறு செய்ய ஒருவர் உண்மையாக முயன்ருல் பறவைகள், மிருகங்கள், மரங்கள், பூக்கள் முதலியவை பற்றியே நன்மை வரக்கூடிய முறையிற் படித்துக்கொள்ளலாம் இப்பழக்கத்தாலுண்டாகும் அவதான சக்தியின் உதவியால் இன்று உலகிலுண்டாகும் சிக்கலான மாற்றங்களை நன்கு விளக்கிக்கொள்ளக் கூடியதாயிருக்கும்.

உங்களுடன் உணவு, உடை, நடை முதலியவற்றில் வேறுபட்டிருப்பவர்கள் அல்லது கொள்கை வேறுபாடுடையவர்கள் ஆகியோரை மதித்து நடக்கக் கூடியதாய் நீங்கள் பழகிக் கொள்ளவேண்டும்

நீங்கள் அரசியலை முழுதாய்த் தவிர்ப்பதும் நல்லதல்ல. அதில் ஈடுபட்டுப்பாதிக்கப்படுதலும் நல்லதல்ல. மாணவர் அரசியல்பற்றி விரும்பிப் படித்து நன்மையடையத் தக்கவாறும் ஆனல் அவர்களின் மனம் அதிற் பிணிக்கப்பட்டுப் பாதிக்கப்படாதவாறும் செய்யத்தக்க நடுவழி ஒன்றை நாங்கள் அமைக்க வேண்டும்.

கலைப் பேரறிஞர் என்னும் பட்டத்தைப் பெற்றவுடன் தாங்கள் எல்லாம் படித்து விட்டதாய் மாணவர் நினைக்கக் கூடாது. இவ்வாறு பட்டம் பெற்றமையே அதன்மேல் தாமாகப் படிப்பதற்கு வேண்டிய ஆரம்ப அத்திபாரமாகும்.

தம்மைச் சுற்றியுள்ளவை பற்றிச் சிந்தை செலுத்தி அவற்றில் ஈடுபடுதல் ஓர் தேவையாகின்றது. அல்லது உடலுக்கும்மனத்துக்கும் எல்லையிட்டு வாழ்க்கையை ஒடுக்கிக்கொள்ளுவதாகும்.

சீனமக்கள் மேற்கொள்ளவேண்டியவையாக இன்று அங்கே விதந்து கூறப்படும் ஐந்து அருங்குணங்கள் இங்கேயும் வளர்க்கப்படுதல் வேண்டும். தாய்நாட்டில், தொழிலில், உயிரில், விஞ்ஞானத்தில், நாட்டுப் பொருள்களைப் பாதுகாப்பதில் அன்பார்ந்த ஆர்வங் காட்டுதலே அவ்வருங் குணங்களாகும்.

மாணவர் தங்கள் அறிவை வளராது ஒடுக்குதலைத் தவிர்க்கவேண்டும். சிந்தித்துச் செயலாற்றுதற்கு இக்கால உலகில் மிகப்பல வழிகளிருக்கின்றன. ஒரே ஒரு வழிதான் உண்டென்று ஒருவர் சொல்லுவாராஞல் அவர் வாழ்க்கையின் அத்திபாரக் கொள்கையையே அறியாதவராகின்ருர்.

உலகமானது ஒருபெரும் சிக்கலான பொருள் என்றும் அதில் மக்கள் தங்கள் வாழ்க்கையை நடத்துவதற்கு மிகப்பல வழிகளிருக்கின்றன என்றும் அறிதலே முதலாவதாக ஒருவர் படிக்க வேண்டியது. ஒருவர் தாம் செல்லும் வழியை மற்றவர்களுக்குத் தாழ்மையுடன் தெரியச் செய்தல் வேண்டும். உலக மக்கள் யாவரும் செல்லுதற்கு அந்த ஒன்றே சிறந்த வழி என்று பெருமிதத்துடன் பறைசாற்றக்கூடாது.

—0—

# பொற்கிழி வழங்கல்



யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபை நாவலர் நினைவு மண்டபத்தில் 28 - 10 - 56 ஞாயிற்றுக்கிழமை 4மணிக்கு ஒரு மாசபை கூடிற்று. அதில் உடுவில் தமிழ்ப்புலவர், வ. மு. இரத்தினேசுவர ஐயரவர்களுக்குச் சபையாரின் சன்மானமான பட்டுப் போர்த்துப் பொற்கிழிவழங்கப்பெற்றது தலைவர், திரு. த. முத்துச்சாமிப்பிள்ளை அவர்கள் முன்னுரை புகன்ருர். செயலாளர் திரு. மு. மயில்வாகனமவர்கள் வரவேற்புரை கூறினர். வடமாகாண அதிபர் திரு. ம. ஸ்ரீகாந்தா அவர்கள் பண்டிதர் திரு. கா. பொ. இரத்தினம் அவர்கள் முதலானோர் வாழ்த்துரைகளும் படித்தனர். அண்ணமலைப் பல்கலைக்கழகத் தமிழ் விரிவுரையாளர் வித்துவான் மு அருணசலப்பிள்ளையவர்களின் வாழ்த்துப் பாக்களைப் பண்டிதர் திரு. நமசிவாயமவர்கள் படித்தார்கள். பின் திரு. ச முத்துக்குமாரசாமிப்பிள்ளையவர்கள் வாழ்த்துக் கவிகளோடு சொற்பொழிவு செய்தார். திரு. மு. ஞானப்பிரகாசர். வித்துவான் திரு க கார்த்திகேசர், முதலியார் திரு C. முத்துத்தம்பி முதலியோர் பாராட்டுரை செழுமையுற உரைத்தார்கள் திரு கு. அம்பலவாணர் பொற்கிழியை ஈந்தார். ஐயர் அவர்களின் பதிலுரை நன்றியுரை நிகழ்ந்தது. பிரம்மஸ்ரீ. சு. பரமேஸ்வரக்குருக்களவர்கள் பூமாலை புனைந்து வெண்பொன்னுமளித்தார்கள். சிற்றுண்டி வழங்கப்பெற்றது திரு. அம்பலவாணர் யாவருக்கும் வந்தனோபசார மொழி நவின்ருர். முடிப்புரையுடன் தமிழ்வேத ஒலிபரவக் கூட்டம் சம்பூரணமாயிற்று.

## நாட்டு முன்னேற்றத்துக்கு விஞ்ஞானம்

### அரசியல்வாதம் எல்லாம் வல்லதல்ல!

— ஸ்ரீ நேரு.

"அடுத்த 5 அல்லது 10 ஆண்டுகளில் இந்தியாவில் தொழில்களுக்குப் பயன்படுத்துவதற்காக அணு சக்தி உற்பத்தி தொடங்கிவிடும் இந்தியா விஞ்ஞானத்துறையில் அதிகம் முன்னேறவில்லை. ஆயினும் இந்தியாவில்திறமைமிகுந்த விஞ்ஞானிகள் பலர் இருக்கின்றனர். அணு சக்தி ஆராய்ச்சித் துறையில் இந்தியா உலகில் ஆறுவது இடத்தை வகிக்கிறது.

விஞ்ஞானத் துறையில் போதுமான அளவுக்கு முன்னேறத் தவறிவிட்டால் உலகில் வேறு எந்த முன்னேற்றத்தையும் இந்தியா அடைய முடியாது.

நம்நாடு முதல் தரமான நாடாக வேண்டுமானுல் நம்மிடம் முதல்தரமான விஞ்ஞானிகளும் பொறியியல் வல்லுனரும் இருக்கவேண்டும். வெறும் அரசியல் வாதிகள் மட்டும் நாட்டை அதிகம் முன்னேற்றிவிட முடியாது.

ஒவ்வொரு நாட்டுக்கும் அதற்கென்றே தனியான பல சிக்கல்கள் இருக்கின்றன. மற்றநாடுகள் அவைகளின் சிக்கல்களை எப்படி தீர்த்துக்கொள்கின்றன என்று பார்த்துப் பாடம் படித்துக் கொள்ளலாம். ஆனல் கண்ணை மூடிக்கொண்டு அவற்றை அப்படியே கையாள முடியாது. அது கூடாது. நம்முடையசொந்தத் தொல்லைகளை நாமே தான் தீர்க்கும்வழி கண்டுபிடித்தாகவேண்டும் என்று பண்டித நேரு அவர்கள் அலகபாத்தில் நடந்த கூட்டமொன்றிற் பேசும்போது கூறினர்.

திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல்லாம் அரனாமமே
சூழ்க வையகமுந் துயர் தீர்கவே.
திருச்சிற்றம்பலம்

# இந்துசாதனம்

யாழ். துர்முகி ஹு ஐப்பசி மீ
கஎ உ வெள்ளிக்கிழமை

## ஆபாச வல்லரசுகளின் அட்டூழியம்

எந்த நாழிகையிலும் எங்கேயாவது போர் ஆரம்பித்துவிடும் என்று உலகம் ஏக்கமுறத் தொடங்கியே காலம் கழிந்து விட்டது. தக்க தருணம் சம்பவிக்க வேண்டுமென்று எதிர்நோக்கியிருந்த வல்லரசுகளுக்கு மத்திய கிழக்குப் பிரதேசத்தில் வசதிகள் உதவியளிக்கும் வகையிலே உண்டான பொழுதே உலகயுத்தம் உருவாய்விட்டதென்னலாம். இசுரவேலுக்கும் அயல் நாடுகளுக்கும் இடையே தோன்றிய மனவேற்றுமையை எந்த விதத்திலும் பயன்படுத்தி எகிப்தியரை அடிபணியச் செய்துவிடுவதற்கு இங்கிலாந்தும் பிரான்சும் இரவு பகலாக அயராது முயற்சி செய்ததன் பேறாக இப்பொழுது மத்திய கிழக்கிலே யுத்த விபத்து விளைந்து விட்டது.

யார் போருக்குக் காரணர் என ஆராய்ந்து பார்ப்பதற்கு 'ஐக்கிய நாடுகள்' என்ற பொது அமைப்புக்குப் போதிய தத்துவம் இருக்கிறதா என்று சந்தேகிக்க வேண்டிய நிலைமை தோன்றியிருக்கின்றது. அமெரிக்கா, உருசியா, இங்கிலாந்து, பிரான்சு முதலிய வல்லரசுகள் இதுவரையும் தனித்தனி முதன்மைபெறுவதற்கு முயன்று வந்தனவேயன்றி உலக அமைதிக்கோ மனிதகுல நன்மைக்கோ பணியாற்றவில்லை என்ற உண்மை இப்பொழுது வெளியாகிவிட்டது. எனவே இந்த வல்லரசுகளின் ஆதிக்கம் நிலவும் 'ஐக்கிய நாடுகள்' அமைப்பு நடுநின்று பழி செய்தவர்களைத் தண்டிப்பதற்கு வழிவகைகளைக் கையாள முடியுமா என்பது சந்தேகமே.

எகிப்து நாட்டுக்குள்ளே இசுரவேற்படைகள் புகுந்துவிட்டனவென்றறிந்த அக்கணமே பொறுப்பு வாய்ந்தவர்கள் என்று வாய் புலம்பித் திரியும் வல்லரசுகள் உடனடியாக இந்த அடாத செயலை அவ்வளவிலே கண்டித்து விடாமல் தங்களுக்குட் பிளவுபட்டார்களென்றால் இவர்கள் என்ன துணிபு கொண்டு உலக விவகாரங்களை விசாரித்துச் சமன் செய்யும் பணியை ஏற்றிருக்கின்றார்கள்?

உலக நாடுகள் அனைத்தும் இங்கிலாந்தும் பிரான்சும் கலகக்காரர்கள் மட்டுமன்று அத்துமீறி அடாத்துச் செய்த குற்றத்துக்காளாகிவிட்டவர்கள் என ஒரே குரலிற் சொல்லும் நிலைமையிருந்தும் எகிப்துமீது இந்த இரண்டு வல்லரசுகளும் இன்னும் தொடர்ந்து குண்டுமாரி பொழிந்து கோரக்கொலை புரிகின்றனவென்றால் இதர தேசங்கள் குறுக்கிடமாட்டார்கள் என்ற துணிபு ஆங்கிலேய பிரான்சிய ஏகாதிபத்திய அரக்கர் அகத்தில் இருக்கின்றதென்றே சொல்லுதல் வேண்டும். உலகப் போர்கள் இரண்டு நடந்தன. அப்பொழுது இந்த இரு வல்லரசுகளுக்கும் உலக ஆதரவு இருந்த துண்மை. அந்த நாடுகளில் அனைவரும் அபிமானத்துடன் போர்க்கெழுதலைப் பரோபகாரமாக மேற்கொண்டனர். இப்பொழுது இங்கிலாந்திலே தொழிற் கட்சியினர் தங்கள் நாட்டுக்கு ஒரு வசையை ஒரு பழியை இழுத்து விட்டார்கள் இப்பொழுது அரசு நடத்துபவர்கள் என்று ஆவேசத்துடன் ஆட்சேபிக்கும் நிலைமை இருக்கின்றதென்றால் இந்தப் படுபழியை இங்கிலாந்தும் பிரான்சும் ஏன் சுமக்கின்றனவோயாமறியோம்.

அதிகார ஆசையினால் ஆதிக்க வெறியினால் அகந்தைகொண்ட நாடுகள் முன் எவ்வாறு முடிவடைந்தனவோ அவ்வாறே இன்றும் அடிபணிந்து அலங்கோலப் படுவது துண்மையெனினும் மனிதப் பண்பாடு நிலவவேண்டுமேயானால் ஆசிய ஆபிரிக்க அமைச்சர்கள் ஒன்றுகூடி இந்த ஏகாதிபத்திய வல்லரசுகள் மட்டுமன்று ஏனைய ஆதிக்க நாடுகளும் வேறெந்த தேசத்திலாவது எவ்வித காரணத்துக்காகவேனும் ஆதிக்கஞ் செலுத்த முடியாத வகையிலே வழிவகைகளைத் தேடிக் கையாளுவது அத்தியாவசியகமாகின்றது.

# தமிழரை ஒழிக்கும் திட்டங்கள்

## மறைமுகமாய்த் தொடங்கி வெளிப்படையாய் நடக்கின்றன

## தமிழ்த் தலைவர்களின் நிலை என்ன? தமிழ் மக்கள் செய்யவேண்டியதென்ன?

பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி மண்டபத்தில் திரு. ஆர். தவசோதி தலைமையில் தமிழ் வாலிபர் முன்னணிக் கூட்டம் ஒன்று நடைபெற்றது. சேனநாயக அரசாங்கம் முதல் சிங்கள மக்கள் முன்னணி வரையில் மறைமுகமாகவும் வெளிப்படையாகவும் தமிழ் மக்களை அழித்தொழிக்கும் பொருட்டுச் செய்யப்பட்டு வரும் அநீதிகள் பல எடுத்துக் காட்டப்பட்டன. தமிழ்த் தலைவர்கள் தகுந்தவாறு வழிகாட்டித் தங்கள் கடமையைச் செய்யாமையால் தாம் செய்யவேண்டியதைச் செய்ய முன்வந்திருப்பதாக வாலிபர் உறுதி மொழி பல கூறினர்.

திரு. தவசோதி பேசும்போது தமிழ் மொழியைப் பாதுகாக்க வேண்டிய போராட்டத்துக்குத் தலைவர்கள் வழி காட்டுவார்களென்று இதுவரை எதிர்பார்த்திருந்தோம். இன்று ஏமாற்றம் அடைந்துள்ளோம். இளைஞர்களாகிய நாங்கள் எங்கள் தாய் மொழியைக் காக்க எத்தகைய தியாகங்களையும் செய்யத் தயாராகிவிட்டோம் என்றார்.

கலாநிதி எஸ். வித்தியானந்தன் அவர்கள் பேசும்போது ஈழ நாட்டின் பழங்குடி மக்களாகிய தமிழ் மக்களுக்குத் தோன்றியிருக்கும் இன்னலின் ஆணிவேர் ஸ்ரீ டி. எஸ். சேனநாயக அரசாங்க காலத்திலேயே நிலத்தில் ஊன்றிவிட்டது. அதன் வழி கொத்தலாவல ஆட்சிக் காலத்தில் சிங்களக் குடியேற்றம் திட்டப்படி செய்யப்பட்டது. ஆயினும் அரசாங்கத்துக்கெதிராய்த் தமிழர் போர் முழக்கம் செய்யவில்லை. உண்மையை அறிந்தும் கண்மூடி மௌனிகளாயிருந்தனர். சிங்கள மக்கள் முன்னணி அரசாங்கம் ஒளிப்பு மறைப்பின்றி வெளிப்படையாகச் சிங்களக் குடியேற்றத்தைச்செய்து தமிழ் மொழியையும் ஒதுக்கித் தனிச் சிங்களச் சட்டத்தைக் கையாளுகின்றது. தமிழ்மக்கள் நம்பிக்கை வைத்திருந்த தலைவர்களே எமக்குத் துரோகிகளாகி விட்டனர். தமிழைக் காப்போமென்று வீர முழக்கம் செய்த இரு பிரதிநிதிகள் நிலை மாறி அரசாங்கத்துடன் சேர்ந்துவிட்டனர். இதனால் அரசியற் கட்சிகளை நம்பியிருப்பதில் நன்மையில்லை என்று கண்டமையால் இந்த வாலிபர் முன்னணி உருவாகியது. தமிழர் தங்கள் வயிற்றைக் கழுவுவதற்காகச் சிங்களத்தைக் கற்பார்களானால் அது தற்கொலை செய்தற்கொப்பாகும். தன் மானமுள்ள தமிழர் ஒருபோதும் சிங்களத்தைக் கற்கமாட்டார்கள் என்று கூறினார்.

திரு. ஆர். ஆர். குரோசெற் தம்பையா அவர்கள் பேசும்போது எடின்பரோ கோமகன் இலங்கை வந்

தொடர்ச்சி 6-ம் பக்கம்

## திருக்கேதீச்சரத் திருப்பணிச் சபை

திருக்கேதீச்சரத் திருப்பணிச் சபையின் பொது நிருவாகசபைக் கூட்டமொன்று உபதலைவர் திரு. பி. ஸ்ரீஸ்கந்தராசா அவர்கள் தலைமையில் பம்பலப்பிட்டி பழைய கதிரேசன் கோயிலில் நடைபெற்றது. வருடாந்த அறிக்கையுடன் கணக்கு வாசிக்கப்பெற்று அங்கீகரிக்கப்பட்டது

திருப்பணியைத் துரிதப்படுத்தும் வழிவகைகள் ஆராயப்பட்டு வேண்டிய உபசபைகளும் நியமிக்கப்பட்டன.

# தீபாவலித் திருநாள்

## குறிக்கோள் எது? கொண்டாடும் வகையென்ன?

தீபாவலி தமிழர் பண்டிகையா? ஒரு அரசனை அநியாயமாகக் கொன்ற நாளை, தமிழர்களாகிய நாம் மகிழ்ச்சியுடன் கொண்டாட வேண்டுமா? என்ற கேள்விகள் இளைஞர்களாகிய நமது உள்ளத்திலே சில காலமாகத் தோன்றிக்கொண்டே இருக்கின்றன.

தீபாவலியைமாத்திரமல்ல, மற்றெல்லாப் பண்டிகைகளையுமே நாம் கொண்டாடத்தான் வேண்டும். புராணக் கதை ஒருபுறம் இருக்கட்டும். நாம் அதைப்பற்றிக் கவலைப்படத் தேவையில்லை. சாதி, இன, வித்தியாசமின்றி, குழந்தைகள் முதல் கிழவர்கள்வரை, ஆண் பெண் அனைவரும் மகிழ்ச்சியாயிருக்கின்ற ஒரு தினத்தில், நாமும் கவலைகளை மறந்து மற்றையோருடன் சேர்ந்து மகிழ்ச்சியாயிருப்பதில் என்ன தவறு?

இன்றைய உலகம் யந்திர உலகம். நினைத்ததெல்லாவற்றிற்கும் இயந்திரங்கள் இருக்கின்ற இன்றைய உலகிலே, மனிதர்களும் இயந்திரங்களாகத்தான் மாறிவிட்டார்கள். பழையகாலத்திலேகிராமத்து மக்கள், சிற்சில சந்தர்ப்பங்களில் ஒரு பொதுவான இடத்திலே ஒன்றுகூடி, ஆடிப்பாடி மகிழ்ந்து மனித உணர்ச்சிகளைப் பரிமாறி வாழ்ந்த அந்தக் கூட்டு வாழ்க்கையை இன்று காண்பதரிது. கோவில் விழாக்களிலே, பண்டிகை நாட்களிலே மக்கள் ஒன்று சேரும்போது, அங்கே இன்ப வெள்ளம் பாயும். மக்கள், பட்டின மக்கள் என்ற வேறுபாடு இன்றி எல்லோரும் மகிழ்ச்சிக்கடலில் நீந்தி விளையாடுவர். இந்திரவிழா நடைபெற்றபோது, காவிரிப்பூம்பட்டினவாசிகளுடைய குதூகலத்தைப்பற்றிப் படிக்கும்போதே, நமது உள்ளங்களில் மகிழ்ச்சிக் கிளுகிளுப்பு ஏற்பட்டால், அன்றிருந்து மக்கள் எத்தகைய சந்தோஷத்தை அனுபவித்திருப்பார்கள் என்பதைச் சொல்லவும் வேண்டுமா? ஆனால் இன்று மக்கள் ஒன்று சேர்வது அரிதாய்விட்டது. அடுத்த வீட்டுக்காரரைத் தெரியாமலே நம்மில் அநேகர் வாழ்கின்றோம். பக்கத்து வீட்டுக்காரருடன் பேசுவதற்கே தொலைபேசியின் (Telephone) உதவியை நாடுமளவிற்கு நமது நாகரிகம் வளர்ந்துவிட்டது.

இப்படியான உலகத்திலே, தீபாவலி போன்ற விசேஷ நாட்களிலாவது, நாம் ஒன்றுசேர்ந்து மகிழ்ச்சியுடன் இருக்க முடிகின்றதல்லவா? தீபாவலி என்றாலே தீபங்களின் வரிசை என்றுதான் பொருள். அன்று நாம் ஒளியை வணங்குகின்றோம். உலகத்திலுள்ள பல்வேறு மதங்கள் எத்தனையோ விஷயங்களில் மாறுபட்டிருந்தாலும், இரண்டு விஷயங்களில் ஒற்றுமைப்பட்டிருக்கின்றன. எல்லா மதத்தினருமே ஒளியைப் போற்றுகின்றனர். மலர்களையும் போற்றுகின்றனர். ஒளியும், மலரும் எல்லா வழிபாட்டு இடங்களிலும் முக்கிய இடத்தைப் பெறுகின்றன. நெய், தேங்காய் நெய் ஆகியவற்றைஊற்றித் திருவிளக்கிடுதலும், கர்ப்பூரம் எரித்தலும், இந்து ஆலயங்களில் நாம் காணும் காட்சி. பௌத்தர்களும் நெய்யூற்றி விளக்கேற்றுகின்றனர். கிறித்துவ மக்கள் மெழுகுவர்த்தி எரிக்கின்றனர். இப்படியே வெவ்வேறு மதத்தினரும் ஏதோ உருவில் ஒளியைப் போற்றி வருகின்றனர்.

உலகிலுள்ளஎல்லா உயிர்களுடைய வாழ்க்கைக்கும் ஆதாரமாக இருப்பது சூரிய ஒளி. சூரிய ஒளி இல்லாவிட்டால், நீரில்லை, நிலமில்லை, மலையில்லை, காடு இல்லை, காற்று இலலை, ஒன்றுமேயில்லை. இந்தச்

தொடர்ச்சி 5 ம் பக்கம்

ஆசிரியர்

ஸ்ரீ. சி சரவணபவன் B A

# நேயர்கள் நெஞ்சம்

ஆசிரிய அன்ப!

## திருக்கேதீச்சரத் திருக்கோயில் நிர்வாகிகளுக்கு வேண்டுகோள்

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் பெருமானின் அருட்பாதச் சுவடு பற்றிய வரும் சைவத் தொண்டருமாகிய ஸ்ரீமத் சிவபாதசுந்தரனுர் அவர்கள் திருக்கேதீச்சரக் கோயிலைப் புனருத்தாரணம் செயயும் பொருட்டு 1948-ம் ஆண்டில் கொழும்பு நகரில் பல உத்தியோகஸ்தர்கள் மத்தியில் திருப்பணிச் சபையொன்றைத் தாபித்தனர். அதே சபையின் கிளைச்சபை ஒன்றை மலாய்நாட்டுச் சைவ அன்பர்கள் மூலம் நிறுவச் செய்தனர். இக்கிளைச்சபையார் கௌரியம்பாள் கோயிலைக் கட்டி முடிப்பதாகத் தீர்மானித்திருக்கிறார்கள். பத்திரிகை வாயிலாகவும் வெளிப்படுத்தி யிருக்கிறார்கள். இப்போது அதன் நிலைமை தெரியவில்லை. அவர்கள் திருப்பணிக்குப் பெருந் தொகைப் பணம் சேகரித்து வைத்திருக்கிறார்கள் என அறிகிறோம். அச் சபைக் காரியதரிசியும் சைவ அறிஞருமாகிய திரு. த. மயில்வாகனம் பிள்ளை உபாத்தியாயர் அவர்கள் 14-10-56 ல் எமக்கு எழுதிய கடிதம் ஒன்றில் பின்வருமாறு கூறுகிறார். "கொழும்பு நிர்வாக சபையாரை நாங்கள் இங்கிருந்து கேட்ட சில கேள்விகளுக்கு அவர்கள் மூன்று வருடங்களாயும் விடை கொடுக்கிறார்களில்லை. செட்டிமார் பேரில் கோயில் நிலம் இருக்கிறது. அது திருக்கேதீச்சரத் திருப்பணிச் சபைக்கு மாற்றவேண்டியது முக்கியமாகும். இது ஏன் இன்னும் செய்யவில்லையென்பது தெரியவில்லை. கொழும்புச் சபையாரும் சொல்லுகிறார்களில்லை. இன்னும் அவர்கள் மறுமொழியைக் காத்திருக்கிறோம்".

இவ்வாறு குறிப்பிட்டுள்ளபடியால் திருக்கேதீச்கரத் திருப்பணிச்சபையார் தக்க பதில் அளிக்கவேண்டியதே கடமையாகும். ஒழுங்கான நெறிகளிற் சிறந்த சைவப் பெரியார் தாபித்த திருப்பணிச் சபையினர் தங்கள் கிளைச்சபையினருக்கு இதுவரையும் பதில் கொடாதது வருந்துதற்குரியதாகும். இனியாவது பதிலைக் கொடுத்துத் திருப்பணியை நிறைவேற்ற எல்லாம் வல்ல கேதீச்சரப்பெருமான் திருவருள் பாலிப்பாராக!

செ. கோவிந்தசாமி
தென்மயிலை

# நாலடியாரின் உவமை நயம்

———0———

## வாழ்க்கை வளம்பெறச் செய்ய வழிவகை

நிலையாமை பற்றியும் நாம் செய்ய வேண்டிய தவம் முதலிய வீடுபேற்றிற்குரிய அறங்களைப்பற்றியும் நாலடியார் தொடர்ந்து பல அத்தியாயங்களில் எடுத்துக் காட்டியுள்ளது. அதன் பின்பு இந்த உலகத்திலே நாம் மேன்மையுடன் வாழ்வதற்கேற்ற வழி வகைகளை வகுக்கின்றது. அத்தகைய வழிகளிலேயே முதலாவது மேன்மக்களைச் சேர்ந்து ஒழுகுவதாகும். ஒருவனுடைய அறிவு அவன் சேரும் இனத்தைப் பொறுத்திருக்கும் என வள்ளுவர் ஓர் உவமையை எடுத்தாண்டு விளக்குகிறார்.

"நிலத்தியல்பால் நீர்திரிந்தற்றாகும் மாந்தர்க்கு
இனத்தியல்பதாகும் அறிவு"

என்பது வள்ளுவர்கூறும் விளக்கமாகும்.

மேன் மக்களென்போர் யாவர்? பிறர் இரகசியத்தை அறிவதிற் செவிடர்களாயும், பிறர் வசையுரைப்பதில் ஊமையராயும், அயலார் மனைவியையோ பொருளையோ நோக்கும் போது கண் குருடராயும் பொய் பேசாதவர்களாய் உள்ளர் மேன் மக்கள் என ஒரு சிறிது அவர்கள் குணம் எடுத்துப் பேசப்படுகின்றது. சந்திரனுக்குச் சான்றோரை உவமை கூறும் நாலடியார் ஒரு வித்தியாசத்தையும் எடுத்துக் காட்டுகிறார் — "திங்கள், மறுவாற்றும் சான்றோரஃது

ஸ்ரீ வ. குகசர்மா

ஆற்றார் தெருமந்து, தேய்வர் ஒரு மாசுறின்' என்பது நாலடியார் காட்டும் வித்தியாசம். கரும்பைப் பலபட வருத்திச் சாற்றைக் கொண்டாலும் இனிய சாற்றைத்தான் கொடுக்கும். அதுபோலச் சான்றோரை வடுப்படப் பேசியகண்ணும் குடிப்பிறந்தார் தம் வாயால் இழிந்த சொற்களைப் பேசமாட்டார்கள்.

மேன்மக்களைச் சார்ந்தால் வரும் பயன் என் என்பதைப் பார்ப்போம். 'அறியாத பருவத்தே நாம்செய்த பிழைகள் எல்லாம் எம்மை விட்டு சூரியனது கதிர்களைக் கண்ட புல்நுனியிலேஉள்ள பனித் திவலைகள் அற்றுப் போதலைப்போல அகன்றுவிடும் என்பது நாலடியாரின் கருத்து. மழை பெய்தலினாலே ஊரில் உண்டாகும் அழுக்குடைய நீரெல்லாம் ஒரு பரிசுத்தம் பொருந்திய நதியிலே பாய்கிறது. ஊரிலே வெள்ளமாகப் பாயும்போது நாமதைக் கண்டால் வெறுப்படைவோம். ஆனால் ஆற்றில் பாய்ந்த பின்பு நாம் அதை வெறுக்கிறோமா?

"ஊரங் கணநீர் உரவுநீர்
சேர்ந்தக்கால்
பேரும் பிறிதாகித் தீர்த்தமாம்
— ஒரும்
குலமாட்சி இல்லாரும்
குன்றுபோல் நிற்பர்
நலமாட்சி நல்லாரைச் சார்ந்து"

நல்லாருடன் சேரும் மாட்சியை எவ்வளவு தெளிவாக விளக்கிக் காட்டுகிறது. இவ்வுவமைபோன்று திருவள்ளுவரும் பெரியார் துணையே சிறந்தவலிமை எனக் கூறுகிறார். "தம்மிற்பெரியார் தமராய் ஒழுகுதல் - வண்மையெல்லாந் தலை" என்பது வள்ளுவர் வாக்கு,

பாலொடு கலந்த நீர் போலச் சிறியாருடன் உள்ள சிறுமை அழிந்து பெருமையுடைய நல்லினத்தின் பெருமையே நல்லினம் சேர்ந்தாரில் மிக்குத் தோன்றும். நீரையும் பாலையும் யாரும் பிரித்துண்ண முடியாது. ஆனல் அன்னப்பட்சி அவ்வாறு பிரித்துண்ணும் தன்மையுடையதெனப் புலவர் கூறுவர். நாலடியாரிலே பிறிதோர் இடத்தில் கல்வியைப் பற்றிக் கூறும்பொழுது இது எடுத்துக் காட்டப்படுகிறது. உலகத்தில் எழுதப்படும் நூல்கள பலவிதமாக விருக்கும். சில கற்பதற்கே தகுதியற்றவையாயிருக்கும். எனவே அன்னத்தின் தன்மை அவசியம் என எடுத்துக்காட்டப்படுகிறது.

"ஆயாய்ந்து அமைவுடைய
கற்பவே நீரொழியப்
பாலுண் குருகிற் றெரிந்து"

இவ்விதஎடுத்துக்காட்டை பவணந்தி முனிவரும் நன்னூலில் எடுத்துக் காட்டியுள்ளார். "அன்னமாவே மண்ணொடு கிளியே இல்லிக் குடமாடெருமை நெய்யரி அன்னர் தலையிடை கடை மாணுக்கர்" என்னும் சூத்திரத்தில் அன்னம் முதல் மாணுக்கர்க்கு உவமையாக் கப்படுகிறது.

மேன்மக்கள் தொடர்புடன் நீங்கா முயற்சியும் நன்மை பயப்பதாகும். காற்றுக்கு ஆடுகின்ற மெல்லிய கொம்பராகி மணலின்கண்ணே நின்ற சிறிய கொம்பரும் பெலம் பெற்றுவிட்டால் யானை கட்டுகின்ற தறியாகும். ஒருவன் முயன்று வந்தால் அவனுக்கு பெருமை அதனல் வரும். பெருமை முயற்சி தரும் என்பது குறள். செய்தற்கெளிமையானவற்றை யாவரும் செய்வார்கள். அருமையான காரியத்தை முயன்று செய்து முடித்தலல்லவோ சிறப்பு.

"இசையா தெனினும்
இயற்றியோர் ஆற்றல்
அசையாது நிற்பதாம்
ஆண்மை"

என்பது நாலடியார் காட்டும் வழி.

"அருமை யுடைத்தென்று
அசாவாமை வேண்டும்
பெருமை முயற்சி தரும்"

என்பது வள்ளுவர் வகுத்த வழி.

கறையானல் அழிக்கப்பட்ட ஆலமரத்தை, அதன் தளர்ச்சியை வெளிக்காட்டாது மறைத்து விழுதுகள் தாங்கிக் கொள்வது போல தந்தையிடம் காணப்படும் தளர்ச்சியை அவர்தம் மக்கள் தம் முயற்சியால் மறைத்துவிடுவர்.

பெரியோர் தன்மையும் அவரிடம் சேர்வதால் உண்டாகும் நன்மையும், முயற்சியின் பெருமையும் ஆகியவற்றுள் சிற்சில தகுந்த உவமைகளுடன் மேலே எடுத்துக் காட்டப்பெற்றுள்ளன. அவற்றிலிருந்து அறியவேண்டிய சிறப்புகளை அறிந்து வாழ்க்கையிற் பயன் படுத்துதல் எக் கடனாகும்.

# பல்கலைக் கழகங்களின் நல் வளர்ச்சிக்குரிய பாதை

———:0:———

## கல்வி அறிவைச் செல்வனே பயன்படுத்தும் பயிற்சி வேண்டும்

[பம்பாய்ப் பல்கலைக் கழக உபஅதிகார அதிபர் கலாநிதி யோண் மத்தாய் அவர்கள் பரோடாப் பல்கலைக்கழக பட்டமளிப்புவிழாப்பேச்சைத் தழுவியுள்ளது]

சர்வகலாசாலைகள் பொதுவாகவும் சமூக சீர்திருத்தப்பகுதி சிறப்பாகவுமசெய்யவேண்டியவிசேட கடமை ஒன்றுள்ளது. அரசியல் பொருளாதாரம் என்பன முதலாகச். சமூக சீர்திருத்தக் கலைகளில் ஈடுபட்டிருக்கும் மாணவர் நாட்டின் சிக்கல்களை நீக்குதற்குப் பல திறப்பட்ட வழிவகைகளை ஆராய்ந்து கண்டுபிடிக்க முயலுதல் பெரும் பிரயோசனம் தருவதுடன் அவர்களுக்குச் சிறந்த விவேகப் பயிற்சியுமாகின்றது. இது நல்ல நோக்கத்துடன் சர்வ கலாசாலையின் தகுதிக்கேற்பச் சிறப்புறச் செய்யப்படுதல் வேண்டு மென்பது சொல்லாமலேயமையும்.

கலா நிபுணர்களும் அனுபவசாலிகளும் ஒன்றுகூடி நாட்டின் நிலைமைகளுக்கேற்ப, குறித்த ஆராய்ச்சித் திட்டங்கள் அமைத்தல் வேண்டும். பல்வேறு வழிகளை ஆராய்ந்த திட்டங்கள் சமர்ப்பிக்கப்படும் பொழுது அவற்றை ஆதாரமாகக் கொண்டு வேறு வேறு அரசியற் சேவை முறைகளையும் அமைத்துக் கொள்ளலாம்.

சர்வ கலாசாலைக் கலை வளர்ச்சிப் பகுதிகளில் பொது சனங்களின் கருத்துக்கள் இடம்பெற விடக் கூடாது. கலை வளர்ச்சித் தொழில் ஆசிரியர்களின் தனிப் பொறுப்பி லிருக்க வேண்டும். பொதுசனமோ அரசாங்கமோ எவ்விதமாயும் அத்துறையிற் கலந்து கொள்ள விடக்கூடாது.

சர்வகலாசாலைகளிலுள்ள கலா வளர்ச்சிச் சபைகளுக்கு உறுப்பினரை நியமிப்பதில் தேர்தல் முறை மேன்மேலும் கையாளப்பட்டு வளர்ந்து வருதல் மிகவும் வருந்தவேண்டியது. இம்முறை கையாளப் படுதலால் பெருங் கலைச்சிறப் பமைந்தோர் வகிக்க வேண்டிய பதவிகள் பதவிமோகங் கொண்ட பிற ஆசிரியர்களுக்குப் போய்விடுகின்றன. இந்திய சர்வ கலாசாலைகளில் இத்தகையநிகழ்ச்சிகள் சாதாரணமாகக் காணவருகின்றன. தேர்தல் முறையை இத்தகைய சந்தர்ப்பங்களிலும் கையாளுதலை எதிர்த்துப் பொதுசன அபிப்பிராயம் உண்டாக்கப்படுதல் வேண்டும்.

பொருளாதாரமுன்னேற்றம் மிக விசேடமானதும் மிக அவசியமானதுமாய் விட்டது. ஆகையினலே எங்கள் கலை வளர்ச்சித் துறைகளில் தொழிற் கல்வி விஞ்ஞானக்கல்விகள் பெருமிடம் பெறுகின்றன. இவ்வாறமைதலே முறையாகும். அத்துடன் சர்வகலாசாலைகளிலிருந்து வெளியே வரும் கலைஞர்கள் பண்பாட்டுடன் பொருள்களைச் சமன் செய்து சீர்தூக்கும் சிறப்புடையவர்களாதலும் வேண்டும்; அவர்கள் வெறும் கல்வி அறிவு மாத்திரமன்றி அதைப் பயன்படுத்தி நிலையான இன்ப அநுபவம் பெறத்தக்க தகுதியுடையவர்களாதலும் வேண்டும்.

அதிகாரத்திலமர்ந்துள்ளோர் விஞ்ஞானத்துக்குக் கொடுத்திருக்கும் மதிப்பு, நிச்சயமாகச் சரியானதே என்று ஏற்றுக் கொள்ளுதல் வேண்டும். ஆனல் அரசியலார் அரசியலையும் விஞ்ஞானத்தையும் கலந்து முன்னேற்றத்தை விரைவுபடுத்த முயல்வதால் அப்படி முயலுதல் மக்கட் பண்பாட்டை அழிக்கத் தக்கது என்று, கல்வியின் பெரும் பயன் என்னவென் றுணர்ந்த அறிஞர் எச்சரிக்கை விடுக்கவேண்டிய காலம் வந்துவிட்டது.

யாழ்ப்பாணம்

**ஐக்கிய இலாபநிதி**

1918-ம் ஆ. ஸ்தாபிதமானது

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.
இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப்பணம் ரூபா
**616313,00**
100 ரூபா விகிதமான 8000 பங்குகள்

பங்குப்பணங்கட்டுமுறை.

மாசமொன்றுக்கு 1 ரூபா விகிதமாக 80 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக் கொடுக்கப்படும். பங்குகள் எந்தநேரமும் வாங்கலாம்.

தினசரிப் பற்றுவரவு.

எச்சமதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானால் ஒருவிகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்

க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம் 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்கவிதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

கடன்

நகைகள் ஈடு வைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை
என்மூலமாக அறிந்துகொள்ளலாம்

**S. கனகசபை**

Std 14 சிறுப்பர்

# கலாநிதியின் மதமாற்றம்

## மேன்மைக்கு மிகமாறான செயல்

இந்தியாவும் இந்தியர்களும் ஆங்கிலேயரின் அதிகார ஆட்சியிலிருக்கும் பொழுது, ஆங்கிலேயர்கள் இந்தியர்கட்குச் செய்த அநீதியான செயல்களைக் கண்ட மகாத்மா அவர்கள் சகிக்கமுடியாமல் ஆங்கிலேயரின் ஆட்சியை ஒழிக்கத் தீர்மானித்து உண்ணாவிரதம், சத்தியாக்கிரகம், பகிஷ்காரம் ஒத்துழையாமை என்னும் இயக்கங்களைத் தொடங்கி, நடாத்தி வெற்றி பெற்று ஆங்கிலேயர் ஆட்சியை இந்தியாவில் இல்லாதொழித்து தாம் உயிருடனிருக்கும்போதே சுயராச்சியம் பெற்றார். அடிகள், இப்படியான சாத்விகப் போர் நடத்தி வருங்காலத்தில், ஒருமுறை இங்கிலாந்தின் பிரதம மந்திரியாயிருந்த இரம்சே மாக்டொனல்ட் என்பவர் இருபது கோடி தாழ்த்தப்பட்ட வகுப்பினராயுள்ள மக்களைப் பிரித்துவிடத் துணிந்து, அவர்கட்குப் புறம்பான வாக்குரிமை கொடுத்துச் சின்னாபின்னப்படுத்த எண்ணிய சமயம் மகாத்மா அறிந்த இருபத்தொருநாள் உண்ணாவிரதம் தொடங்கி நடத்தினார். இதைக் கேள்விப்பட்ட கலாநிதி. இரவிந்தரநாத் தாகூர் அவர்கள் மகாத்மாவிடம் சென்று நிறைந்த கவலையுடன் மகாத்மாவைத் தழுவி இந்த விரதத்தின் நோக்கம் என்னவென்று கேட்க மகாத்மா சொன்னார். "தாழ்த்தப்பட்ட வகுப்பினரென வழங்கும் கரிசனர்கள் தொகையில் 20 கோடி மக்கள் இருக்கிறார்கள். இவர்களைப்

திரு. நா. சேனாதிராசா
யாழ். கமக்காரர்சங்கத் தலைவர்

பிரித்துப் புறம்பாக வாக்குரிமை வழங்கினால் இப்போது இந்துக்களாயிருக்கும் இந்த மக்கள் ஒருவேளை கிறிஸ்து மதத்தில் அல்லது இஸ்லாம் மதத்தில் அல்லது பௌத்த மதத்தில் சேருவார்கள். அப்படி அவர்கள் மதமாற்றம் செய்தால். இந்துசமயம் பெலப்பற்றதாகும். ஆனதால் இரம்சேமாக்டொனல்டின் எண்ணம் பூர்த்தியடையாமல் செய்வதே இந்த உண்ணாவிரதத்தின் நோக்கம்" என்று சொல்லி முடித்தார். கலாநிதி இரவிந்தரும் சந்தோஷமடைந்தார். காந்தியடிகளின் விரதம் இந்தியா முழுவதும் அறிய வந்ததுமல்லாமல் உலகம் முழுதுமே அறியவந்தது. இந்தியாவிலுள்ள சகல அரசியல் தலைவர்களும் ஒத்துழைத்து தங்கிக்கு மேல் தந்தி இரம்சே மாக்டொனல்டுக்கும் இங்கிலாந்தின் பாராளுமன்றத்துக்கும் அனுப்பி, மாக்டொனல்டின் தீர்மானத்தை நிறைவேற விடாது செய்து, தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்குவாக்குரிமை மற்றெல்லோருடனும் சேர்த்து வழங்கப்பட்டது. மகாத்மா பாடுபட்டது இரண்டு நோக்கங்களுடன். ஒன்று தாழ்த்தப்பட்ட கரிசனர்களைப் பிரிக்கப்படாதென்பது. மற்றது இந்து சமயம் வலியற்று உலக்கை தேய்ந்து உளிப் பிடி போலாகிவிடும் என்பது. இதை மறந்து இன்றைக்கு இந்தியாவில் நடப்பதென்ன? தாழ்ந்த குடும்பத்திற் பிறந்து பெரிய கலாநிதியாய்,மேதாவியாய் விளங்கி, இந்தியாவின் அரசியல் முறை நடக்க வேண்டிய சட்டம் வகுத்துக் கொடுத்த, கலாநிதி அம்பேத்கார் மணந்தது பிராமணப் பெண். பிராமணப் பெண்ணோ இந்து சமயத்திற் பிறந்தவர். அப்படியே இருவரும் இந்து சமய முறைப்படி இல்லறம் நடாத்தி வந்து முழுக்குடும்பமும் இன்று பௌத்த மதத்திற் சேர்ந்து மதமாற்றம் தாங்கள் செய்ததோடு நில்லாது எத்தனையோ பெருந் தொகை மக்களையும் மதமாற்றம் செய்தார்கள். இது சரியோ. இந்து சமயத்திற்பார்க்க பௌத்த சமயம் உண்மையான சமயமென அறிந்து சென்றார்களா? அல்லது சத்துராதிக்குச் சகுனப் பிழை காட்டத் துணிந்தசெயலா? உலகம் முழுதும் காந்தி அடிகளின் அடிச்சுவட்டைப் பின்பற்றி நடக்க, கலாநிதிஅம்பேத்கார் மாத்திரம் இப்படிச் செய்ததென்ன காரணமோ? தனது சமூகத்திற்கு காந்தியடிகள் செய்த சேவை காணாதென்றா? அவர் செய்த சேவை அளவுக்கு உலகில் வேறு யார் செய்தார்? இதை மறந்தும் இந்து சமயத்தைப் புறக்கணித்தும், தற்காலம் தாழ்த்தப்பட்டோர் அனுபவிக்கும் எல்லாவிதமான சம உரிமைகளை மறந்தும், கலாநிதி அம்பேத்கார் செய்த செயலையும் கூறிய கூற்றையும் எவரும் ஒப்புக்கொள்ள மாட்டார். ஒரு சமயத்திலிருந்து இன்னொரு சமயத்

தொடர்ச்சி 6-ம் பக்கம்

# உங்கள் நக்ஷத்திரம்?

எங்கள் சோதிடர்

ஸ்ரீ ராதாகிருஷ்ணன் கணிபபது.

[ இவ்வாரப் பலன்கள் 4—11—56 —— 10—11—56. ]

**மேடராசி** அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்.

இந்த வாரம் முழுதும் மனச் சமாதானமிருக்கமாட்டாது; தொந்தரவான பிரயாணங்களை நீர் மேற்கொள்ள வேண்டிவரலாம். நண்பர்களுக்கிடையிற் பிழை எண்ணங்களுக இடமுண்டு. ஞாயிறு திங்கள் செவ்வாய் கவனமாய்க் கழிக்கவேண்டும்.

**இடபராசி** கார்த்திகை 2, 3, 4-ம் கால்கள் ரோகிணி, மிருகசீரிடம், 1, 2-ம் பாதம்.

புது முயற்சிகளுக்கு முதல் இரு நாட்களும் நல்லாயிருக்கும் உம்முடைய கருமங்களை நீர் இலகுவாக ஒழுங்குபண்ணக்கூடியதாயிருக்கும். செவ்வாய் புதன் வியாழன் மிகுந்த கோபத்தை மூட்டும், வாரஇறுதி திரும்பவும் நன்றாகும்.

**மிதுனராசி** மிருகசீரிடம், 3, 4 திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3, ம் பாதம்.

கடைசி இரு நாட்கள் தவிர இந்த வாரம் வியாபாரக் கருமங்களுக்கு நல்லதாகும். ஆனால் உமக்கு மனச் சமாதானமிருக்கமாட்டாது. நண்பர்கள் இனத்தவர்கள் மூலம் தொந்தரவுகளுக் கிடமுண்டு. கடைசி இரு நாட்களையும் கவனமாய்க் கழிக்கவும்.

**கடகராசி** புனர்பூசம் 4ம் பாதம் பூசம் ஆயிலியம்.

கந்தோரில் உம்முடைய எல்லாச் செயல்களிலும் நீர் இந்த வாரம் கவனமாயிருக்க வேண்டும். நீர் பழிமொழிக்காளாக்கப்படுதற்கிடமிருக்கின்றது. தேகசுகமும் சிறிதும் நல்லாயிருக்கமாட்டாது,

**சிங்கராசி** மகம், உத்திரம் பூரம், 1ம் பாதம்.

ஒரு நல்லவாரம். உம்முடைய இடைஞ்சல்களுட் பலவற்றை இந்தவாரம் நீர் நீக்கக்கூடியதாயிருக்கும். நடுவாரத்தில் நண்பருடன் வாக்குவாதங்களைத் தவிர்க்கவும். வார இறுதி திரும்பவும் நன்றாகும்.

**கன்னிராசி** உத்திரம் 2, 3, 4ம் பாதம் அத்தம் சித்திரை 1, 2ம் பாதம்.

நீர் சில கண்டனங்களை இந்த வாரம் முன்னிடவேண்டி வரக்கூடும். ஆனால் நீர் அச்சமின்றி முன்னேறுவீர். பணத்துறையில் நல்லவாரம். ஆனால் செலவும் அதிகமாயிருக்கும்,

**துலாம்** சித்திரை 3, 4ம் பாதம் சுவாதி விசாகம் 1, 2, 3ம் பாதம்.

இந்தவாரம் முழுதும் மனச் சமாதானமிருக்கமாட்டாது. உம்முடைய மேலதிகாரிகளுடன் நீர் செய்யும் கருமங்களெல்லாவற்றிலும் கவனமாயிருக்கவும். நீர் சண்டைதொடுக்க முந்துவீர். சண்டைகளைத் தவிர்க்கவும்.

**விருட்சிகராசி** விசாகம் 4.ம் பாதம் அநுஷம், கேட்டை.

பொறுப்புக் கூடுதலாயிருக்கும். ஆனால் அதனால் நீர் இன்புறுவீர். உம்முடைய செலவைச் சமாளிக்கவேண்டிய பணம் பெறுவீர். ஆனால் மனச்சமாதானமிருக்கமாட்டாது.

**தனுராசி** மூலம் பூராடம் உத்தராடம், 1ம் பாதம்.

உத்தியோக கருமங்களுக்கு ஒரு நல்லவாரம். ஆனால் சொந்தக் கருமங்கள் செய்யப்படாமலிருக்கும். உம்முடைய வாக்குறுதிகளை நிறைவேற்றுவதில் வருத்தப்படுவீர். வாரஇறுதியில் இனத்தவர்களுடன் சண்டைகளுக்கிடமுண்டு,

**மகரராசி** உத்தராடம் 2 3 4ம் பாதம் திருவோணம் அவிட்டம் 1, 2ம் பாதம்.

உம்முடைய கருமங்களில் இந்த வாரம் மிகப்பெரும் திருத்தங்கள் உண்டாகும். எதிர்ப்பு அற்றுப்போதலைக் காண்பீர். திசாபுத்திகளும் நல்லாயிருந்தால் நீர் காத்திராத ஒரு இலாபத்தைப் பெறுவீர்.

**கும்பராசி** அவிட்டம் 3, 4ம் பாதம், சதயம், பூரட்டாதி 1, 2, 3ம் பாதம்,

உம்முடைய சில சொந்தக் கருமங்களில் நீர் இந்தவாரம் ஏமாற்றம் அடையக்கூடும். ஆனால் உத்தியோகத்துறையில் நல்ல வாரம் தனலாபங்களும் புகழும் நிச்சயம். நடுவாரத்திற் சண்டைகளைத் தவிர்க்கவும்.

**மீனராசி** பூரட்டாதி 4, உத்தரட்டாதி ரேவதி,

உம்முடைய சொந்தக் கருமங்களில் இந்தவாரம் சில திருத்தங்களை நீர் காண்பீர், ஆனாலும் மனச்சமாதானமிருக்கமாட்டாது. மேலதிகாரிகளுடன் சண்டைகளைத் தவிர்க்கவும். பணத்துறையில் நல்லவாரம்,

# மாணவர் வளர்ச்சிக்கு வழி

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்ற மாணவர்களைப் பாராட்டும் பொருட்டு நடந்த ஆசிரியர் சங்கக கூட்டத்தில் இராசா சேர். முத்தையா செட்டியார் அவர்கள் பேசும்போது மாணவர்களின் வளர்ச்சியிலும் ஒழுக்கத்திலும் ஆசிரியர்கள் அக்கறை காட்டவேண்டும். ஒவ்வொரு ஆசிரியரும் சில மாணவர்களைக்கண்காணித்துக்கொள்ளும் முறையைப் பின்பற்ற வேண்டும். கிறித்தவர்கள் இவ்வாறு நடத்தி பலரும் பாராட்டும்படி வளர்ச்சிபெற்று வருகிறார்கள். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலும் இத்தகைய அமைப்பு செயல்பட வேண்டும். மாணவர்களை அதிகமாகக் கல்லூரிகளில் வைத்துக்கொண்டு கண்காணிக்காமல் இருப்பதை விடக் குறைந்த அளவு மாணவர்கள் தொகையை வைத்துக்கொண்டு அவர்களைச் சிறந்தவர்களாக நாட்டுக்கு அளிப்பதே சிறந்தது. இதனால் ஆசிரியர்களின் எண்ணிக்கை அதிகமாக்கப்பட வேண்டியிருந்தாலும் அவ்வாறு செய்தே ஆகவேண்டும். இந்த முறையைப் பல்கலைக் கழக ஆசிரியர்கள் பின்பற்றி இன்னும் ஓர் ஆண்டிற்குள் இதனால் ஏற்பட்ட பலனைக் காட்டுவார்களென எண்ணுகிறேன் என்று கூறினார்.

—ப—

உ

# சமய தீக்ஷை

நிகழும் துர்முகி வரு ஐப்பசி மீ உசஉ (9-11-56) வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபை ஆதரவில் சபை நாவலர் மண்டபத்தில் நீராவிமடம் ஸ்ரீமத் ந. வைத்தியநாதக் குருக்கள் அவர்கள் சைவப் பிள்ளைகளுக்கும் முதியோர்களுக்கும் சமயதீக்ஷை செய்து வைப்பார்கள். கிரியைகள் காலை 8 மணிக்கு ஆரம்பமாகும். மேற்படி சபை மண்டபத்தில் சமயதீக்ஷைபெற விரும்புகிறவர்கள் ஆசாரசீலராய் குறித்த இடத்துக்கு காலை 8 மணிக்கு முன் வருவார்களாக.

மு. மயில்வாகனம்
சமயப்பிரசார அமைச்சர்

சைவ பரிபாலனசபை
யாழ்ப்பாணம் (M 398 2-11)

# மூன்ரும் உலக யுத்தம் மூண்டுவிட்டதா?

## எகிப்தை இங்கிலாந்தும் பிரான்சும் இசுரவேலும் தாக்குகின்றன

எகிப்து நாட்டுக்குள் இசுரவேற் படைகள் புகுந்துவிட்டன இங்கிலாந்தும் பிரான்சும் எகிப்தைத் தாக்குகின்றன. சூவெசுக் கால்வாயைக் கைப்பற்ற ஆங்கில பிரான்சிய ஆகாயப் படை கப்பற்படைகள் ஆரம்பித்து விட்டன.

'ஐக்கிய நாடுகளின்' பொதுச்சபை எகிப்திலிருந்து இதர சேனைகள் வெளியேற வேண்டும் என்று தீர்மானித்தது. இங்கிலாந்திற் பாராளுமன்றத்திலே தொழிற் கட்சி எகிப்துமீது தாக்கம் நியாயமற்றதெனக் குற்றஞ்சாட்டியது. ஆங்கிலேய அரசாங்கம் அதிகப்படியான வாக்குகளால் தப்பிப் பிழைத்துவிட்டது

## விளம்பரம்

மூளாய் கூட்டுறவு வைத்திய சாலைச் சங்கத்தின் இருபத்தோராம் வருடாந்தக் கூட்டம் வரும் டிசெம்பர் மாதத்தில் வைக்கப்படும். அங்கத்தவர் யாரும் ஏதும் பிரேரணை அக்கூட்டத்திற் பிரேரிக்க விரும்பினுல் அதை எழுத்து மூலம் காரியதரிசிக்கு நவம்பர் மாதம் 15-ம் திகதி அல்லது அதற்குமுன் சேரக் கூடியதாய் அனுப்பவேண்டியது. அது பிரேரணை மாதிரியாய் சாதாரணமாய் யாரும் விளங்கிக்கொள்ளக் கூடியதாய்த் தமிழ்ப்பாஷையில் எழுதப்பட்டு பிரேரிப்பவராலும் அனுவதிப்பவராலும் கைச்சாத்திடப்பட்டு இருத்தல் வேண்டும்.

R. K அருளம்பலம்
காரியதரிசி
28-10-56
M. 399 2-11-56,

# தீபாவலித் திருநாள்

[2-ம் பக்கத் தொடர்ச்சி]

சூரிய ஒளியைப் போற்றி வணங்கும் பண்டிகைதான் தைப்பொங்கல். இன்னும் இந்துக்களுடைய விசேஷ தினங்களாகிய திருக்கார்த்திகை, மகாசிவராத்திரி ஆகியவற்றின்போதும் முக்கிய இடம்பெறுவது ஒளியேயாகும். இறைவனைப் பற்றிப் பாடிய நமது சமயப் பெரியோர்களும் "சோதியே, சுடரே, சுடரொளி விளக்கே" என்றும் "அருட்பெருஞ்சோதி"என்றும், "ஞானஒளி' என்றும் "பரஞ் சுடரே" என்றும் பாடியிருக்கின்ருர்கள் "மாயையென்னும் இருள் சூழ்ந்த உலகிலே கிடந்துழலும் மக்களை ஞானவொளியைக்காட்டிக் கரைசேர்" என்றும் இறைவனை வேண்டியிருக்கின்ருர்கள். கார்டினல் நியூமன் (Cardinal Newman)என்னும் ஆங்கிலக் கவிஞனும் "அருளொளியே! எனக்கு வழி காட்டு" என்ற தமது கவிதையில் இதே கருத்தைத்தான் கூறியிருக்கின்ருர். உலகப்பெரியார் காந்தியடிகளுக்குப் பிடித்த கவிதைகளுள் இந்தக் கவிதையும் ஒன்ருகும் என்பதை நாம் மறக்கக்கூடாது.

இனி, புராணக்கதைக்கு வருவோம். அசுரன் ஒருவன் இவ்வுலகத்திலுள்ள மக்களுக்கும், மற்றைய தேவர்களுக்கும் சொல்லொணுக் கஷ்டங்களை விளைவித்தான். துன்புறுத்தினுன். இவற்றைப் பொறுக்க முடியாது, எல்லோரும் சென்று திருமாலிடம் முறையிட்டனர். திருமால் அசுரனைக் கொன்று எல்லோருக்கும் மகிழ்ச்சியை உண்டாக்கினுர். அந்த நாள்தான் தீபாவலித் தினமாகும்.

இவ்வளவு பெரிய அசுரன் இந்த உலகத்திலே இருக்கமுடியுமா? அவனைத் தேவர்களாலே ஏன் கொல்ல முடியவில்லை? தானே கொல்லவேண்டும் என்ற நிர்ப்பந்தம் ஏற்படும் என்ருல், ஏன் முதலில் அவனைக் கடவுள் படைத்தார்? திருமாலுடைய வேலை காத்தல் தொழில் தானே, ஆகவே அவரால் எப்படி ஒருவனை அழிக்க முடியும்? என்பன போன்ற 'சில்லறை'க் கேள்விகளை விட்டுவிட்டு கதைபோதிக்கும் உண்மைக்கு வருவோம்.

கொடுமை செய்வோர் முடிவில்நாசமடைவர், அறியாமை நீங்கி அறிவே நிலை நிற்கும் என்பதையே இக்கதை விளக்குகின்றது. மனிதர்களாகப் பிறந்த நாம் நல்லவர்களாக வாழ வேண்டும். வாழ முயற்சி செய்யவேண்டும். எதுவிதத்திலும் மற்றையோருக்குத் தீமை செய்யாது வாழ வேண்டும். ஆனல் நல்லவர்களாக வாழ்வதில் எத்தனையோ கஷ்டங்கள் இருக்கின்றன. பொய் சொல்லாது வாழ்வதில் உள்ள கஷ்டங்களை அரிச்சந்திரன் கதை நமக்குத் தெளிவாகக்காட்டுகின்றது. மாமிசம் சாப்பிடுவதில்லை என்ற விரதம் பூண்டபடியால், எத்தனை நாள் காந்தியடிகள் பட்டினியால் கஷ்டப்பட்டார்? இடையில் ஏற்படும் கஷ்டங்களை மன வலிமையுடன் சமாளித்து வந்தபடியால்தான் முடிவில் பெரும் வெற்றியை ஈட்டினுர்கள். இன்றும் மக்களுடைய மனதிலே உலாவிக்கொண்டிருக்கின்ருர்கள்.

இதற்கு மாருக மனம் போன போக்கின்படி வாழ்பவர்கள் முதலில் ஒருவித நன்மையைப் பெறுகின்ருர்கள்தான் ஆனல் முடிவில் பெரு நட்டத்தையே அடைகின்ருர்கள். எல்லோராலும் தூற்றப்பட்டு இகழ்ந்தேசப்படு, துன்பச் சுழலில் சிக்கித் தவிப்பார்கள். மற்றவர்களுடைய சொத்தைத் திருடுவதினுல் நாம் திடீரெனப் பணக்காரராக மாறலாம். ஆனல் அந்த இன்பம் எத்தனை நாளைக்கு? உண்மை வெளிப்படும் வரைக்கும், எப்போது வெளிப்படுமோ என்ற திகில். வெளிப்பட்டவுடனே ஊரார் உலகத்தாரின் அவமதிப்பு, ஏச்சு எல்லாம். நல்ல வழியில் பணத்தைச் சேர்ப்பதில் கஷ்டங்கள் இருந்தாலும் ஒருவித மனப்பயமுமின்றி வாழலாமல்லவா? இப்படியாக அறிவொளியூட்டும் பல உண்மைகளைத்தான் நரகாசுரன் கதை நமக்குத் தெளிவாகத் தெரிவிக்கின்றது.

ஆகவே, நரகாசுரன் இறந்த தினம் என்பதை மறந்து தீமை தோற்க நன்மை வென்றது. இருள் நீங்கி ஒளி நிலைபெற்றது என்பதை மனத்திலிருத்தி "தீபாவலித் திருநாளினைக் கொண்டாடித் தீபங்கள் ஏற்றி மகிழ்ந்திடுவோம்".

## சைவ பரிபாலன வித்தியாலயம்

தானந் தவம் தருமஞ் சந்ததமுஞ் செய்வர் சிவ
ஞானந் தனையணைய நல்லோர் பராபரமே,

இவ்வித்தியாலயம் சிரேஷ்ட பாடசாலைத் தராதர வகுப்புகள் வரை நடாத்திச் சைவத்தையும் தமிழையும் வளர்க்கும் பெருநோக்குடையது என்பது யாவரும் அறிந்ததாகும்; இந்நோக்கத்தை மேலும் விருத்தியடையச்செய்ய வருகிற மார்கழிமாதம் முயற்சியும் ஆர்வமும் உள்ள பிள்ளைகளுக்குப் பரிசில்கள் வழங்கி உற்சாகப்படுத்த ஏற்ற ஒழுங்குகள் செய்யப்பெறுகின்றன. அதன் பொருட்டுப் புத்தகம் முதலிய பரசுப் பொருள்களை அனுப்பி உதவி புரியுமாறு அன்பர்களை அன்புடன் கேட்டுக்கொள்ளுகிறேன்.

வியாவில் இங்ஙனம்
காரைநகர் இ. நாகலிங்கம்
1—11—56. M 398 2-11 மனேஜர்

உ
சிவமயம்

# தேவார திருவாசகப் பரிசுகள்

—:o:—

அகத்தியர் தேவாரத்திரட்டிலுள்ள தேவாரங்கள் முழுவதையும், திருவாசகம் முழுவதையும் மனனஞ் செய்பவர்களுக்கு, யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபை யாதரவில் ஷை சபை நாவலர் மண்டபத்தில் தனித்தனி தேர்தல் நடத்திக் கீழே காட்டப்பட்ட பிரகாரம் பரிசில்கள் வழங்கப்படும்.

**அகத்தியர் தேவாரந் திரட்டு முழுவதையும் மனனஞ் செய்பவர்களுக்குக் கொடுக்கப்படும் பரிசில்கள்.**

1. அகத்தியர் தேவாரந் திரட்டு (சதாசிவச் செட்டியார் உரையுடன்)
2. திருவாசகம் (கா. சுப்பிரமணியபிள்ளை உரையுடன்)
3. பணம் ரூபா. 10.

**திருவாசகம் முழுவதையும் மனனஞ் செய்பவர்களுக்குக் கொடுக்கப்படும் பரிசில்கள்.**

1. திருவாசகம் நான்ககவல் (மறைமலையடிகள் உரையுடன்)
2. திருச்சதகம் (பண்டிதமணி கதிரேசன் செட்டியார் விருத்தியுரையுடன்)
3. நீத்தல் விண்ணப்பம் (பண்டிதமணி கதிரேசன் செட்டியார் விருத்தியுரையுடன்)
4. திருவெம்பாவை (பண்டிதமணி கதிரேசன் செட்டியார் விருத்தியுரையுடன்)
5. திருவாசகம் (தருமபுர வாதீனப் பதிப்பு)
6. பணம் ரூபா. 20

பரீட்சை பள்ளிக்கூடங்களின் அடுத்த இந்து மதப் புதுவருட விடுமுறை நாட்களில் நடைபெறும். பரீட்சையிற் பங்குபற்ற விருப்புபவர்கள் அடுத்த தைமாதம் முடியுமுன் தங்கள் மனுப்பத்திரங்களைச் சமயப்பிரசார அமைச்சர் சைவபரிபாலன சபை யாழ்ப்பாணம என்ற விலாசத்துக்கு அனுப்புக.

மு. மயில்வாகனம்,
சமயப்பிரசார அமைச்சர்.

சைவபரிபாலன சபை,
யாழ்ப்பாணம்
9-10-56. M 375 12-10 (த. 150)

## தேசீய மொழியிற் கல்வி

எச். எஸ் சி. வகுப்பு 1958-ம் ஆண்டிலும் சர்வகலாசாலைப் பிரவேச வகுப்பு 1959-ம் ஆண்டிலும் தேசிய மொழிகளிற் போதிக்கப்படுமாம். 17 பாடங்கள் தேசீய மொழிகளில் மாத்திரம் போதிக்கப்படுமாம். 14 பாடங்கள் ஆங்கிலம் சிங்களம் தமிழ் ஆகிய மூன்று மொழிகளில் எந்த ஒரு மொழிமூலமும் போதிக்கப்படக்கூடுமாம்.

## இந்திய முதலமைச்சர் பதவி

இந்திய முதலமைச்சர் பதவியிலிருந்து தாம் நீங்க விரும்புவதாக முன்னொருமுறை பண்டித நேரு அவர்கள் கூறியதும் இந்தியாவிற் பெரும் பரபரப்புண்டாயிற்று. அது உலகெங்கும் பரவியது. அப்பொழுது இந்திய தேசிய மாநாட்டுத் தலைமைப் பதவியை மாத்திரம் துறந்து முதலமைச்சர் பதவியிலிருந்து வந்தார். ஆனல் முதலமைச்சர் பதவியையும் துறக்க விருப்புவதாகத் திரும்பவும் இப்பொழுது அவர் கூறி இந்தியாவிற் பெரும் பரபரப்பு மீட்டுமுண்டாயிருக்கின்றதாம்.

## யாழ்ப்பாணம் ஊர்காவற்றுறைக் கல்வீதி

யாழ்ப்பாணத்திலிருந்து ஊர்காவற்றுறைக்கு வண்டிகள்மூலம் நேரே பிரயாணம் செய்யக்கூடியதாய்க் கல்வீதி ஒன்று அதிக காலதாமசமின்றி அமைக்கப்படுமாம். அரசாங்க பகிரங்க வேலைப் பகுதியார் இத்தொடர்பிற் பொறுப்பேற்றுவிட்டனர் எனக் கூறப்படுகின்றது.

## ஆபத்தான உலக நிலைமை

எகிப்துநாட்டுக்குள் இஸ்ரவேலின் படைகள் புகுந்துவிட்டனவாம். எகிப்தின் 60 மைல் தூர நிலம் இஸ்ரவேற் படைகளின் வசமாய்விட்டது. இஸ்ரவேல் வலிகுறைந்த மிகச் சிறிய நாடு. அமெரிக்க, பிரித்தானிய பிரான்சிய ஆதரவிற் கருமங்களை நடத்துவது; இஸ்ரவேலின் எல்லையை வகுத்து அவ் வெல்லையை மீறக்கூடாதென்றுறுதிக்த மூன்று நாடுகளும் கட்டுப்படுத்தியிருந்தன. அத்தகைய நிலைமையில் எல்லையைக் கடந்து எகிப்திய நாட்டுக்குள் இஸ்ரவேல் படையெடுத்துச் சென்றமை பல நாடுகளில் பலப்பல எண்ணங்களை எழுப்புவதாகும். மூன்ரும் உலக யுத்தத்துக்கு இது வித்திடுகின்றதோ என்பதே இன்று எங்குமுண்டாயிருக்கும் பீதி.

## அடைவு நகைகள் வெந்தீஸ் விற்பனை

**தா. சி. குமாரசாமி &**
**ஸ்ரீமதி தா. சி. சோமசுந்தரம்**
576/6 அம்மன்கோவில் ரோட்
கலட்டி
யாழ்ப்பாணம்

மேற்படியாரின் அடைவு கடையில் 1955-ம் ஆண்டு சித்திரை மாதம் முதலாம் திகதி தொடக்கம் 1955-ம் ஆண்டு புரட்டாதி மாதம் 30-ந் திகதி வரை அடைவு வைக்கப்பட்டு மீட்கப்படாது தவறியிருக்கும் நகைகள் 1956-ம் ஆண்டு கார்த்திகை மாதம் 20-ந் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு என்னுல் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்,

போ. இராசரத்தினம்
கொம்மிஷனர்
M, 397 2-11, 9-11

## திருக்கேதீச்சரப் பூந்தோட்ட வேண்டுகோள்

திருக்கேதீஸ்வர ஆலயத்தின் தேர் வீதிக்கு அப்பால் பூந்தோட்டம் பழச் சோலைகள் ஆக்குவதற்கு இப்பொழுது உகந்த மாரிகாலமாய் இருக்கின்றது. அவற்றிற்குரிய நிலங்கள் பக்குவப் படுத்திப் பிரிக்கப்பட்டு சுற்றிவர முள்ளுக்கம்பி வேலியும் அடைக்கப்பட்டு மேற்பார்வையாளரும் இருப்பதால் அடியார்கள் பூச்செடிகளையும், தென்னை, கமுகு, மா, வாழை முதலாம் பழமரங்களையுங் கொண்டுவந்து நடலாம். தற்சமயம் 200 வாழைகளும், 100 தென்னங்கன்றுகளும், 50 ஒட்டு மாங்கன்றுகளும் தேவையாய் இருக்கின்றன என்று திருக்கேதீச்சரத் திருப்பணி காரியதரிசி திரு. சு. சிவசுப்பிரமணியம் அவர்கள் அறியத் தருகின்றார்.

## கலாநிதியின் மதமாற்றம்

[4-ம் பக்கத் தொடர்ச்சி]

திற்கு ஒருவர் அல்லது பலர் மாறிச் செல்வதாலுல் தாம் அனுட்டித்த சமயம் பொய்யானது,புகும் சமயம் மெய்யானது என்று கண்டால்தான் மெய்யான சமயத்திற்குச் செல்லலாம். எத்தனையோ அறிவிற் சிறந்த பெரியோர் இந்து சமயத்தைத் தழுவியது தங்கள் அறிவால் இந்து சமயந்தான் உண்மையான உண்மையானதென்று கண்டல்லவா? இந்து சமய உண்மைகள் ஒன்றையும் அறியாமல் மற்றச் சமயங்கட்குப் பலர் மாறியிருக்கிறார்கள், கல்விக்காக உத்தியோகத்திற்காக விவாக காரணத்திற்காக பணவசதிக்காக இத்தகைய பலவற்றுக்காக அப்படிச்செய்தார்கள். ஆனல் ஆன்மலாபத்திற்காக வல்ல கலாநிதி அம்பேத்காரின் கூற்று "நுண்ணிய நூல் பல கற்பினும் மற்றுந்தன் உண்மை அறிவே மிகும்" என்ற விதம்போலாயிற்று.

## போதனையிலும் சாதனையே மேலானது

கௌகத்தி என்றமிடத்திலே பண்டிதநேரு அவர்கள் பேசும்போது "நாட்டிலே ஒற்றுமை மிகவும் அவசியமாகத் தேவைப்படும் நேரம் இது. ஆனல் மக்கள் சின்னஞ் சிறு சிக்கல்களிற்கூடத் தங்களுக்குட் சண்டை போட்டுத் தங்கள் சக்திகளைச் சிதறடித்துக் கொள்ளுகிறார்கள். சமயச் சண்டை, மொழித் தகராறு, சாதி வேற்றுமைப் பூசல் இப்படிப் பல விதங்களில் மக்கள் ஒருவரோடொருவர் மோதிக் கொள்கிறார்கள். உலகத்தில் அமைதியை ஏற்படுத்துவதற்காக இந்தியா முயன்றுகொண்டிருக்கிறது. ஆனல் உள்நாட்டிலோ மக்கள் தங்களுக்குள் அடித்துக்கொள்கிறார்கள். நாட்டைச் சூழ்ந்துகொண்டுள்ள இந்த நூதனமான அமைதியின்மை எனக்கு மனவேதனையைத் தருகின்றது என்று கூறினர்.




## தஞ்சை வாணன் கோவை

### சொக்கப்ப நாவலர் உரை

பொய்யாமொழிப்புலவர் பாடிய தஞ்சைவாணன் கோவைக்குப் பேர் பெற்ற பழைய உரையாகிய குன்றத்தூர் - அஷ்டாவதானி சொக்கப்பநாவலர் உரை வித்துவான் ந. சுப்பையபிள்ளை அவர்களின் குறிப்புரையுடன் யாழ். சைவபரிபாலனசபையார் வெளியிட்ட முதலாம் பதிப்பினைப் பலர் அறிவர். அதனை, பின்னர்க் கிடைத்த ஏட்டுப் பிரதிகொண்டு பரிசோதிப்பித்துத் திருத்தப் பதிப்பாக இப்போது வெளியிட்டிருக்கின்றனர். அது தமிழிலக்கண இலக்கியங் கற்போருக்கும், யாழ்ப்பாண ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச்சங்கப் பால பண்டித பரீட்சை, மதுரைத் தமிழ்ச் சங்கப் பால பண்டித பரீட்சை, சென்னைப் பல்கலைக் கழக வித்துவான் பரீட்சை, அண்ணாமலைப் பல்கலைக்கழகப் புலவர் பரீட்சை ஆதியவற்றிற்குக் கற்கும் பரீட்சார்த்திகளுக்கும் பெரிதும் பயன்படக்கூடியது, நாற்கவிராஜ நம்பியகப் பொருளுரையில் இக்கோவைச் செய்யுள் முழுவதும் உதாரணமாகக் காட்டப்பட்டிருத்தலின், அவ் விலக்கணங் கற்போருக்கும் பெரிதும் பயன்படுவதாகும் என்பது சொல்லாமலே விளங்கும்.

மாணிக்கவாசக சுவாமிகள் பாடியருளிய திருச்சிற்றம்பலக் கோவைக்கு அடுத்தபடியாக முதன்மை பெற்று அறிஞரால் பாராட்டப்படுவது தஞ்சைவாணன் கோவையே. அதற்குச் சொக்கப்பநாவலர் இயற்றிய உரை அகப்பொருட்டுறைக் கருத்துக்களையும் பிறவற்றையும் தெள்ளிதின் விளக்குந் தன்மைவாய்ந்து, அக்கோவைக்கு ஓர் அணிகலன்போலத் திகழ்வது என்பது அறிஞர்கருத்து. அங்ஙனஞ் சிறந்து விளங்கும் அக்கோவையின் செய்யுட் கருத்து உரைக் கருத்துக்களை மயக்கமற இலகுவாக விளங்கிக் கற்றற்குச் சாதகமாக வித்துவான் அவர்கள் எழுதிய குறிப்புரை பரீட்சார்த்திகளுக்கும் ஏனையோர்க்கும் பெரிதும் பயன் தரத் தக்கது என்பது இதன் முதற்பதிப்பினுல் அறியக் கூடிய தொன்றாகும்.

இப்புத்தகம் பெறவிரும்புவோர் எம்மிடத்தும், பிரபல புத்தக வியாபார ஸ்தலங்களிலும் விலைக்குப் பெற்றுக் கொள்ளலாகும்.

**விலை ரூபா : 6 - 00.** வியாபாரிகளும், தொகையாக வாங்குவோரும் உரிய கழிவுடன் விலைக்குப் பெறலாம்.

மனேஜர்,
சைவப்பிரகாச யந்திரசாலை,
யாழ்ப்பாணம்.

## அடைவு நகை விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை மேற்கு க. செ. த செல்லையாபிள்ளை கடையில் அடைவுவைக்கப்பட்டு இப்போ தவணை தப்பி எடுபடாமல் இருக்கும் கீழ்விபரிக்கப்படும் நகைகளை நவம்பர் மாதம் 24ம் திகதி சனிக்கிழமை காலை 10 மணி தொடக்கம் என்னுல் மேற்படியார் கடையில் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

| No | ஆம் மீ உ | ரூபா | ஊர் பெயர் சாமான் விபரம் |
|---|---|---|---|
| | 1954 | | |
| 33 | ஏப்ரல் 3 | 30 | மானிப்பாய் ரோட்டு கந்தையா மார்கண்டு தாலி 1 |
| 745 | ,, 24 | 30 | நாவாந்துறை செ. அந்தோனிப்பிள்ளை கல் தாயத்து 1 |
| 1104 | ஜூன் 16 | 20 | இளவாலை S. சிவஸ்டியாம்பிள்ளை தொ இல்லாத கெமிகல் பெண்டன் 1 |
| 1211 | ,, 24 | 20 | மீசாலை வல்லிபுரம் குஞ்சையா கல் மோதிரம் 1 |
| 2197 | ஆகஸ்ட் 16 | 225 | கொக்குவில் மேற்கு க. தாமோதரம்பிள்ளை நெளிக்காப்பு 1 குண்டுச்சங்கிலி 1 |
| 2208 | ,, 17 | 30 | சிவலிங்கப்புளியடி 26 கட்டையன் முருகன் தாலி 1 |
| 2875 | செப்டம்பர் 28 | 400 | சிறும்பியடி சின்னத்தம்பி கந்தையா றேடியோ அன் சாதாவளையல் 3, 2டு பட்டு டைமன் சங்கிலி 1 |
| 3263 | அக்டோபர் 26 | 250 | சுண்டிக்குளி S. காரலசிங்கம் றேடியோ அன் சாதா வளையல் சோடி 2 |
| 3306 | ,, 29 | 15 | நெடுந்தீவு சிவலிங்கம் இரத்தினம் கல் மோதிரம் 1 |
| 3598 | நவம்பர் 20 | 10 | நீராவியடி நா. அருளம்பலம் கிளாவர் மோதிரம் 1 |
| 4000 | டிசம்பர் 18 | 15 | கஸ்தூரியார்ரோட் வ. தியாகராசா மோதிரம் 1 |
| 4177 | ,, 28 | 25 | திருநெல்வேலி இ. செல்லையா வெ கல் திருகுபூ 1 |
| 4209 | ,, 29 | 150 | இணுவில் மேற்கு செல்லையா விநாயகமூர்த்தி பிரவுன்கல் பெண்டனுடன் மணிச்சங்கிலி 1 |
| | 1955 | | |
| 4255 | ஜனவரி 1 | 20 | 143 K. K. S. ரோட் ச. கணேச ஐயர் தொங்கல் இல்லாத பிரவுன் கல் பெண்டன் 1 |
| 4268 | ,, 3 | 550 | சிவன்கோவில் S. கைலாசநாதஐயர் வயிர சண்ணம் 1 கட்டிய மோதிரம் 1 |
| 4314 | ,, 6 | 20 | ராசாவின்தோட்டம் ம. தவராசா குண்டுவைத்த குதிரைப்பவுன் ½ பவுன் 1 |
| 4410 | ,, 13 | 71 | இந்து கோலேச்சுலேன் வே. சண்முகம் வளையல் சோடி 1 |
| 4503 | ,, 20 | 70 | புத்தூர் மேற்கு K. பொன்னையா நெளி வளையல் சோடி 1 |
| 4559 | ,, 25 | 20 | நாவாந்துறை வடக்கு பிலிப். மரியாம்பிள்ளை தொ, இல்லாத பிரவுன் கல் பெண்டன் 1 |
| 4709 | பிப்ரவரி 3 | 40 | சுன்னாகம் ந. சின்னத்துரை றேடியோ வளையல் 1 |

[M. 389 26, 2-11-56]

S PasupatbyChettiar
Auctioneer

## தமிழரை ஒழிக்கும் திட்டங்கள்

[2-ம் பக்கத் தொடர்ச்சி]

தார். அரசாங்கத்தார் எங்கெங்கேயோ எல்லாம் சுற்றிக் காண்பித்தனர். ஆனல் இந் நாட்டில் தமிழர் என்று ஒரு இனம் இருக்கின்றதென்று கோமகனுருக்குத் தெரிந்திருக்கவும்மாட்டாது இதுபோலவே உள்நாட்டிலும் உலக அரங்கிலும் இந் நாடு தனிச் சிங்கள நாடாகக் காட்டும் முயற்சி செய்கின்றனர். திருக்கோணமலை சென்ற கோமகனுருக்குப் புராதனமான கோணேசர் ஆலயத்தைக் காண்பித்தார்களா? அதைக்காட்டாது அதற்குப்பதிலாக ஓர் புஞ்சி சிஞ்ஞோவின் கமத்தைக் காட்டினுர்கள்.

கபடமறியாது அமைதியை விரும்பும் ஒரு சமூகத்தின்மீது அரசாங்கம் போர் தொடுத்திருக்கிறது. ஆகவே சிறுபான்மையினரென்றமையாற் சோர்வடையாது ஒவ்வொருவரும் இப்பொது போராட்டத்திற் குதிக்கவேண்டியது அவசியமாகிவிட்டதென்று உணர்ச்சிமீதூரக் கூறினர்.

திருவாளர்கள்: கே. நேசையா, எச். எம் ஷரிப் கலாநிதி குலரத்தினம் முதலிய பல அறிஞர்களும் நிலைமையை விளக்கிச் செயலாற்றவேண்டிய அவசியம்பற்றிக் கூறினர்.

வானமுகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்

யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபையாருக்காக, வண்ணார்பண்ணை காங்கேசன் துறைவீதி 450-ம் இலக்கத்திலுள்ள, சைவப்பிரகாச யந்திரசாலையில், யாழ்ப்பாணம் நாவலர்வீதி 245-ம் இலக்கத்தில் வசிக்கும் திரு. சுப்பையா பொன்னம்பலம் கந்தையா அவர்களால் 2-11-56 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.